கோயம்புத்தூர் மாவட்டம், பொகலூர், மேம்படுத்தப்பட்ட வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (23.03.2025) திடீர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பாலுசாமி மற்றும் மருத்துவர்கள் உடனிருந்தனர்

உதகையில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏப்.6- அன்று திறந்து வைக்கிறார்!

இறுதிக் கட்டப் பணிகளை ஆய்வு செய்தபின் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

நீலகிரி,மார்ச்.24- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் , நீலகிரி மாவட்டத்தில் 700 படுக்கை வசதிகளை கொண்ட உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையினை 06.04.2025 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைப்பதை முன்னிட்டு, இறுதி கட்டப்பணிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில் நேற்று (23.03.2025) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் , புதிதாக கட்டப்பட்டுள்ள உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையினையும், மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்டுள்ள அவசர சிகிச்சை பிரிவு, பழங்குடியினர்களுக்கான உள்நோயாளிகள் பிரிவு (ஆண்கள் மற்றும் பெண்கள்), எம்.ஆர்.ஐ பிரிவு, சிடி ஸ்கேன் பிரிவு, அறுவை சிகிச்சை பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ; செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் பல்வேறு மருத்துவ கட்;டமைப்புகள் மேம்படுத்தப்பட்டும், ஏற்படுத்தப்பட்டும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடர்ந்து திறந்து வைக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், நீலகிரி மாவட்டத்தில் எமரால்டு மருத்துவமனையில் ரூ.16.44 கோடி செலவில் கட்டப்பட்ட 50 படுக்கைகள் கொண்ட வார்டு மற்றும் அறுவை சிகிச்சை அரங்கும், குன்னூர் அரசு மருத்துவமனையில் ரூ.2.66 கோடி செலவில் கட்டப்பட்ட தடுப்புச்சுவர், வலி மற்றும் பராமரிப்பு மையமும், கோத்தகிரி அரசு மருத்துவமனையில் ரூ.3.30 கோடி செலவில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டடமும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், கட்டபெட்டு, மசினகுடி, அம்பலமூலா, கிண்ணக்கொரை, கூக்கல், தும்மனட்டி ஆகிய 6 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆயுஷ் நல வாழ்வு மையங்களும், முள்ளி மலை, மசக்கல், நெடிக்கோடு, சேலாஸ் ஆகிய நான்கு இடங்களில் புதிதாக ரூ.1.10 கோடி செலவில் துணை சுகாதார நிலையங்களும், ரூ.1.25 கோடி செலவில் தெப்பக்காடு மற்றும் இத்தலார் ஆகிய இரண்டு இடங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் கட்டடம் மற்றும் மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்டடமும், ஆர்.கே.புரம் பகுதியில் நகர்ப்புற நலவாழ்வு மைய கட்டடமும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பாரத பிரதமர் , தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கடந்த 2022 ஜனவரி மாதம் மருத்துவக்கல்லூரியினை திறந்து வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக ரூ.143.69 கோடி செலவில் மருத்துவமனை கட்டுமான பணிகள் துவங்கப்பட்டது. கடந்த 3 ஆண்டுகளாக மாவட்ட நிர்வாகமும், பொதுப்பணித்துறையினரும் இணைந்து நிலச்சரிவு, மழை உள்ளிட்ட பல்வேறு இடர்பாடுகளுக்கிடையே இக்கட்டுமான பணிகளை சிறப்பாக கட்டி முடித்துள்ளனர். மேலும், துறை அமைச்சர் என்கிற முறையில் 4, 5 முறை நான் நேரடியாக இப்பணிகளை கள ஆய்வு மேற்கொண்டேன். நீலகிரி மாவட்டத்தை பொறுத்த வரை மருத்துவத்துறை கட்டமைப்பு நிறைவுபெற்ற மாவட்டமாக உள்ளது. இந்தியாவிலேயே 700 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைந்துள்ள மலை பிரதேசம் என்றால் அது நமது ஊட்டி என்றுதான் சொல்ல வேண்டும்.

மேலும், இம்மருத்துவமனையில் சிறப்பம்சம் என்னவென்றால் பழங்குடியினர்களுக்கு தனி வார்டு ஒன்று அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்ததை தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பழங்குடியினர்களுக்கென தனி வார்டு ஒன்று, ஆண்களுக்கு 20 படுக்கைகள், பெண்களுக்கு 20 படுக்கைகள் மற்றும் மகப்பேறுக்கென்று 10 படுக்கைகள் என மொத்தம் 50 படுக்கைகள் கொண்ட வார்டு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மருத்துவமனையை பொறுத்தவரை எம்.ஆர்.ஐ. சிடி ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே போன்ற அதிநவீன தொழில்நுட்பத்துடனும், 10 அறுவை சிகிச்சை அரங்கங்களுடனும் அமைக்கப்பட்டு, தற்போது திறக்கும் தருவாயில் உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் , நீலகிரி மாவட்டத்திற்கு எதிர்வரும் ஏப்ரல் 05.04.2025 மற்றும் 06.04.2025 ஆகிய இரண்டு நாட்கள் வருகைப்புரிந்து, 06.04.2025 அன்று உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கவுள்ளார்கள். அதுமட்டுமல்லால் 17 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களையும், எமரால்டு அரசு மருத்துவமனையில், ரூ.8.60 செலவில் தங்கும் அறை, ஆம்புலன்ஸ் நிறுத்துமிடம், தடுப்புச்சுவர், கழிவுநீர் சுத்திகரிப்பான் போன்ற பல்வேறு வசதிகள் கொண்ட கூடுதல் கட்டடத்தினையும் திறந்து வைக்கவுள்ளார்கள். மேலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் கூடுதலாக பல்வேறு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும் உள்ளார்கள் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ; தெரிவித்தார்.

முன்னதாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் , அரசு தலைமை கொறடா முன்னிலையில், பழங்குடியின மக்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வுகளின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என்.எஸ்.நிஷா இ.கா.ப., , பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் டி.எஸ்.செல்வவிநாயகம், பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் (கோவை மண்டலம்) ரங்கநாதன், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, உதகை வருவாய் கோட்டாட்சியர் சதீஷ், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன், செயற்பொறியாளர் ரமேஷ், இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) மரு.ராஜசேகர், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.சோமசுந்தரம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவி செயற்பொறியாளர் திருமதி.சங்கீதா, உதகை நகராட்சி ஆணையாளர் ஸ்டேன்லி பாபு, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பீட்டர் ஞானராஜ், நகராட்சித்தலைவர்கள் திருமதி.வாணீஸ்வரி (உதகை), திருமதி.பரிமளா (கூடலூர்), உதகை நகராட்சித் துணைத்தலைவர் ரவிக்குமார், நகராட்சிப் பொறியாளர் சேகரன், இருப்பிட மருத்துவ அலுவலர் மரு.ரவிசங்கர், உதகை நகரமன்ற உறுப்பினர் ஜார்ஜ், உதகை வட்டாட்சியர் சங்கர்கணேஷ் மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பாக முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் கால்பந்தாட்ட போட்டி பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவருமான இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு பந்தாடி கால்பந்தாட்ட போட்டியத் துவக்கி வைத்து கோப்பைகளை அறிமுகப்படுத்தி சிறப்புரை ஆற்றினார். மாலை வரை நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தளபதி கோப்பைகளையும் ரொக்கமாக ரூபாயும் வழங்கினார்.இதில் கோ. காமராஜ், இ. எஸ். பெர்னார்ட், ஏ. கே. கருணாகரன், தையூர் விஜயகுமார், கோ. ஜானகிராமன் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர்கள் இளைஞர் அணி மாணவர் அணி சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாநெல்லூர் – மாதரப்பாக்கம் – பாதிரிவேடு – ஆரம்பாக்கத்தில் மின் அழுத்தக் குறைபாடு!

கும்மிடிப்பூண்டி வட்டத்தில் - 110 கி.வா. துணை மின் நிலையம் அமைத்திடுவீர்!

சட்டப்பேரவையில் – டி.ஜெ.கோவிந்தராஜன் கோரிக்கை!

சென்னை, மார்ச் 24- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது, கும்மிடிப்பூண்டி தொகுதி கழக உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன், "கும்மிடிப்பூண்டி வட்டத்தில் 110 கி.வாட் துணை மின் நிலையம் அமைத்திடுவீர்!" என கோரிக்கை விடுத்தார்.

கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

டி.ஜெ.கோவிந்தராஜன்: கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி வட்டம், மாநெல்லூர், மாதரப்பாக்கம், பாதிரிவேடு குறிப்பாக ஆரம்பாக்கம் பகுதிகளில் மின் அழுத்தக் குறைவு (low voltage) அதிகமாக இருக்கிறது. வர இருக்கக்கூடிய வெயில் காலங்களில் இதை சீரமைத்து, அங்கே 110 கிலோவாட் துணை மின் நிலையம் அமைத்து தருமாறும், அதேபோல ஆரம்பாக்கம் பகுதியில் உதவி பொறியாளர் அலுவலகம் ஒன்றை அமைத்து தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் வி. செந்தில்பாலாஜி: முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று, தேவையான மின் விநியோகத்திற்கு அதுவும் குறிப்பாக, அதிகரித்து வருகின்ற மின் தேவைகளை கவனத்திலே கொண்டு துறையின் சார்பாக தமிழ்நாடு முழுவதும் ஆய்வுகள் செய்யப்பட்டு, எங்கெல்லாம் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமோ அதையெல்லாம் அமைச்சர் பெருமக்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் கவனத்திலிகொண்டு அதற்கான பணிகளை தொடங்கிட வேண்டுமென்று உத்தரவுகளை வழங்கினார்கள். முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 31 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக, உறுப்பினருடைய சட்டமன்ற தொகுதியில் 5 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக நிர்வாகரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

வணிகர்கள் தங்கள் விருப்பம் போல் தொழில் உரிமத்தை

இணையதளம் - இ.சேவை மையத்தில் புதுப்பித்துக் கொள்ளலாம்!

சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை,மார்ச்.24- தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023 விதி 289(1) ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தொழில்புரிவோர் ஆணையர் அவர்களிடம் கட்டாயம் தொழில் உரிமம் பெற வேண்டும். மேலும், விதி 290ன்படி புதியதாக எடுக்கப்படும் மற்றும் புதுப்பிக்கப்படும் தொழில் உரிமங்கள் மூன்று ஆண்டுகள் வரை செல்லத்தக்கவையாக இருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது, வணிகர்களின் கோரிக்கையையடுத்து தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தற்போது விதி 300A ன்படி தொழில் உரிமம் ஓராண்டு அல்லது இரண்டாண்டு அல்லது மூன்றாண்டு என தொழில் உரிமத்தினை அவரவர் விருப்பம் போல் புதுப்பித்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி வணிகர்கள் தங்களது உரிமத்தை இணையதளம் வாயிலாகவும் (chennaicorporation.gov.in), இ-சேவை மையத்திலும், மண்டல அலுவலகங்களிலும் மற்றும் சம்மந்தப்பட்ட உரிமம் ஆய்வாளரிடம் கையடக்க கருவி மூலமாகவும் தொழில் உரிமத்தினை 31.03.2025க்குள் புதுப்பித்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு சென்னை மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருமளவிற்கு வளர்ந்து வரும்

காஞ்சிபுரம் நகரில் - கூடுதலாக மின் மாற்றிகள் நிறுவிடுவீர்!

சட்டப்பேரவையில் – காஞ்சிபுரம் சி.வி.எம்.பி. எழிலரசன் கோரிக்கை!

சென்னை, மார்ச் 24- சட்டப்பேரவையில், காஞ்சிபுரம் தொகுதி கழக உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், "பெருமளவிற்கு வளர்ந்து வரும் காஞ்சிபுரம் நகரின் மின் தேவையைக் கருத்தில் கொண்டு, கூடுதலாக மின் மாற்றிகள் நிறுவிட வேண்டும்" என வேண்டுகோள் விடுத்தார்.

கேள்வி நேரத்தின் போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

சி.வி.எம்.பி. எழிலரசன்: காஞ்சிபுரம், ஆரிய பெரும்பாக்கத்தில் 230 KVA substation ல், 10 MVA power transformerகள் இரண்டு இருக்கின்றன. அது தன்னுடைய காலம் முடிந்து புதியதாக மாற்ற வேண்டிய நிலையில் இருக்கிறது. அதனை 16 MVA power transformer ஆக மாற்றி அதன் மூலமாக காஞ்சிபுரத்தினுடைய தேவைகள் அதிகளவு இருக்கிறது. இப்பொழுது மாவட்ட மருத்துவமனைக்கு தேவை இருக்கிறது. அதைப் போல அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனை உலகளாவிய அளவிற்கான தரமுயர்த்துதல் இருக்கிற காரணத்தால், அதைப்போல அண்ணா பட்டுப்பூங்கா இருக்கிற காரணத்தால் இவற்றுக்கெல்லாம் கணக்கில் எடுத்து, கூடுதல் தேவையை கருத்தில்கொண்டு அதை நிறைவேற்றித் தர அரசு முன் வருமா?

தாமலில் இருக்கக்கூடிய பிரிவு அலுவலகம் 30 ஆண்டுகள் பழமையானதாகி, அது சேதாரம் அடைந்திருக்கிறது. எனவே, அதை மாற்றுவதற்கும், காஞ்சிபுரம் பெருநகராட்சியில் இரண்டு புதிய பிரிவு அலுவலகங்களை உருவாக்கி தந்திருக்கிறார். அதற்காக நன்றியை தெரிவித்து, அங்கே அலுவலகம் கட்டித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் வி.செந்தில்பாலாஜி: காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதியில் ஏற்கனவே மின் தேவையை கவனத்திலே கொண்டு 242 மின்மாற்றிகள் புதிதாக நிறுவப்பட்டிருக்கின்றன. மேலும், கூடுதலாக ஒரு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். அதற்காக, துறையின் சார்பாக நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டு, அதனுடைய பணிகள் இப்பொழுது தொடங்க இருக்கின்றோம். மேலும், உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கிற புதிய அலுவலகம் குறித்து அங்கு இருக்கக்கூடிய மின் இணைப்புகளுடைய எண்ணிக்கையை கவனத்தில் கொண்டு, துறை அதற்கான நடவடிக்கை எடுக்கும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

ஆற்காடு தொகுதி – எசையனூர் – பென்னாகர் – வரகூர் – சம்மசமுத்திரம் –

நஞ்சுகொண்டாபுரம் ஊராட்சிகளில் கால்நடை கிளை நிலையம் அமைத்திடுக?

சட்டப்பேரவையில் - ஜெ.எல்.ஈஸ்வரப்பன் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 24- சட்டப்பேரவையில் ஆற்காடு தொகுதி கழக உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எழுப்பிய கேள்வியும், அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் அளித்த பதிலும் வருமாறு:-

ஜெ.எல். ஈஸ்வரப்பன்: ஆற்காடு தொகுதியில் 5,000 க்கும் மேற்பட்ட கால்நடை அலகுகள் உள்ளதாலும், 4 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு வேறு கால்நடை கிளைநிலையங்கள் இல்லாத காரணத்தினால் ஆற்காடு ஒன்றியம், எசையனூர் ஊராட்சியிலும், திமிரி ஒன்றியம், பென்னாகர், கனியனூர், வரகூர் ஊராட்சிகளிலும், கணியம்பாடி ஒன்றியம், சம்மசமுத்திரம், நஞ்சுகொண்டாபுரம் ஊராட்சியிலும் கால்நடை கிளைநிலையம் அமைக்க அரசின் சாத்தியக்கூறுகள் உள்ள காரணத்தினால், அமைச்சர் அவர்கள் அங்கு கால்நடை கிளைநிலையம் அமைக்க முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, அதிகளவில் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், கால்நடை வளர்ப்போர் ஆகியோரிடமிருந்து புதிய கால்நடை கிளை நிலையங்களுக்கான கோரிக்கைகள் மிகுந்த எதிர்பார்ப்புடன் வந்தவண்ணமாக உள்ளன. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கால்நடை கிளை நிலையங்கள் அமைக்கப்படுமா என்று கேட்டார்கள். அந்தப் பகுதியின் தேவைகளின் அடிப்படையில், நிதி நிலைக்கேற்றார்போல், கால்நடை நிலையங்கள் மற்றும் கிளைநிலையங்கள் அமைப்பது குறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்று, நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆலங்குடி சிவ.பாலகிருஷ்ணன்
மார்ச் 24 (2007)

தன்னுடைய இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழக பணியாற்ற தொடங்கியவர்.

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில் ஆலங்குடி வட்டக் கழகத்தின் முதல் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.

பாச்சிக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவராகவும் – புதுக்கோட்டை சமஸ்தான கோவில்களின் அறங்காவலர் குழு தலைவர், திருச்சி மாவட்ட நூலக ஆணைக்குழு துணைத் தலைவர், புதுக்கோட்டை அக்ரோ நிலவள வங்கி, மத்திய கூட்டுறவு வங்கி, வோளாண்மை கூட்டுறவு வங்கி ஆகியவற்றில் இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

1965 இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு ஆறு மாத சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.